REFERENCE LIBRARY 13/7/87

**Subscription**
Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS
*Apply to:*
The Manager,
'Morning Star', Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q/J/64/News/87*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 147 JAFFNA, FRIDAY, 26th JUNE, 1987 No. 26

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**UNDELIVERED ISSUES**

Please re address all undelivered issues of the Morning Star to:
The Manager,
"Morning Star",
Vaddukoddai.

## Taking Jaffna Militarily

Excerpts of the statement issued by the Lanka Sama Samaja Party, the Communist Party of Sri Lanka and the Sri Lanka Mahajana Party on 14th March, 1987.

Failure to reach a just settlement of the ethnic problem through negotiations has placed our people in the most serious and desperate predicament that they have experienced in several generations. The sharp deterioration of relations between the governments of Sri Lanka and India in recent weeks have complicated matters still further and made the situation even more dangerous.

The present situation is fraught with confrontationist potentialities that can only affect adversely the peoples of Sri Lanka and India' the traditional good neighbourly relations betwen them and the cause of regional co operation and peace.

All possibilities of resolving this problem peacefully and through negotiations have been placed in jeopardy. Instead, the so-called "military option" which has already brought terrible death, devastation and prospects of economic ruin to this country, is being escalated, despite the fact that there can be no victors in this senseless civil war.

Things have gone from bad to worse in the period since our government escalated its military activities in the northern province and economic embargo on the Jaffna peninsula and since the government of India, in response, suspended its efforts to bring about a negotiated settlement.

The slaughter of uninvolved civilians, in the course of both the stepped-up military offensive of the govemment and reprisal attacks by the LTTE, has intensified uninvolved citizens of the Jaffna peninsula, who are as much citizens of this country as others, have been especially penalised and subjected to severe economic and other privations in retaliation for the government's failure to solve the ethnic problem politically or to settle accounts with the LTTE.

The attitude of the LTTE leaders is also adding fuel to the fire The hardships that the whole country, including the Tamil's have to undergo are being aggravated by their intransigent rejection of any dialogue and their refusal to put forward any proposals of their own

In this grave hour' our three parties appeal to all concerned to avoid mutual accusations of precipitate actions' to do everything possible to defuse' the situation' and to create conditions that will help a return to the process of seeking a solution through negotiations.

Failure to do so now may well lead to a situation where the opportunity for a negotiated settlement may disappear altogether, with all the costly and terrible consequences that must inevitably follow. Our three parties call on our government to help to create such conditions by withdrawing altogether its economic embargo which is unjust, counter-productive and in view of the government's claim that it has effectively re established its authority in north needless.

We ask it to set a short date by which it will implement its assurance to release political detenues who are uninvoled or only marginally involved. We ask it to announce its intention to repeal the Sixth Amendment of the Constitution, without which its declaration of intent to hold by-elections in the north and east soon will be a futile exercise

As far as a resumption of its military offensive in the Jaffna peninsula, including taking Jaffna town by storm, is concerned, we ask the government to realise that this will involve large-scale bloodshed and widespread destruction, isolate Sri Lanka internationally even further, ruin the whole country economically and do irreparable damage to further efforts to restore friendly and co-operative relations between the communities Even if the security forces establish their supremacy in Jaffna by military might it will not solve the etnic problem, which will remain and continue to fester.

We further urge the LTTE to re-assess its situation realistically, formulate its proposals for a political settlement and agree to take part in the search for such a settlement through negotiation. We cal on all persons in this country, irrespective of their political allegiances, who want to see a viable settlement of our ethnic problem and the other problems that have arisen out of its nonsolution to make similar appeals.

Neither Sri Lanka nor India will gain if imperialist schemes of destabilisation of either country succeed. Only the imperialist circles 'who are playing a double game in this matter' who want to provoke a confrontation between Sri Lanka and India and who hope that by doing so they can promote their own selfish ends in this region and scuttle attempts at making the Indian Ocean a zone of peace will benefit if the situation is allowed to a point of no return.

— Christian Worker

## Doctor of Ministry

Mr. L D. Mahilrajan formerly on the Tutorial Staff of Jaffna College was conferred the degree of Doctor of Ministry on Sunday 24th May, 1987 at Cove Spring United Church of Christ at Troy, OHIO, U.S.A.

Rev. Dr. L. D. Mahilrajan,
Cove Spring United Church
of Christ,
5685 East Walnut Grove Road.
Troy, OHIO, 45373 U. S. A.

*Wedding*

**Rajkumar — Thevakumari**

The solemnization of the marriage of Rev, Rajkumar, son of the late Mr. Varathungam and Mrs. Varathungam of Tellipalai and Worker-in-Charge Atchuvely with Thevakumari daughter of Mr. & Mr. Murugesu of Pungudutive took place at the Cathedral Church Vaddukoddai on Wednesday 24th June at 10.00 a. m.

The marriage was solemnized by the Rt. Rev. D. J. Ambalavanar assisted by Rev. A. V. Jesuthasan. Rev. D. R. Ampalavanar preached the homily.

Lunch followed in the Levi Spaulding Boys Home Dining Hall.

## Ronnie de Mel on: Effects of our dirty war

These things certainly interact. The ethnic conflict has increased our defence budget almost twentyfold in nominal terms, from (Sri Lankan) Rs 500 millions in 1977 to Rs. 10,000 millions this year. Ten thousand million rupees represents almost 25 per cent of our entire domestic budget-without taking foreign aid into account. (And as you know, we dont' get any foreign aid for defence in Sri Lanka.)

Then, this ethnic conflict has had very serious consequences on our tourist industry which has declined by about 50 per cent it has also slowed down foreign investment. Rice production has declined by about 30 per cent because some of the very productive rice areas are in the Northern and Eastern Provinces. Fish production has declined by 50 per cent because a good proportion of the fishing grounds are off the Northen and Eastern coast. So all this has had a tremendous effect on our economy.

So from the economic standpoint, a speedy political solution of our problems is vitally necessary. And I have always consistently, against all opposition, over the last several years advocated this peaceful political solution.

I also consider that India's good offices will be extremely useful to arrive at a peaceful political solution. Even in the most difficult days I have never questioned the sincerity of the Indian Government or Prime Minister Rajiv Gandhi I have been the one person who has never, never questioned the sincerity or the motives of the Indian Government and Prime Minister Rajiv Gandhi

— Christian Worker

## VACANCY

**Hospital Secretary**

Jaffna Diocese of the Church of South India calls for applications for the above post. Candidates shou'd be able to type and work in English and have a knowledge of Book Keeping and auditing. Application forms could be obtained from the Diocesan Office, Vaddukoddai on a payment of a fee of Rs 5/-. Applications close on the 18th of July, 1987.

Secretary,
J. D., C. S. I.,
Diocesan Office,
Vaddukoddai.

## VACANCY

**Administrative Secretary**

Applications are invited for the post of Administrative Secretary in the Jaffna Diocese of the Church of South India.

Applications should be made on forms available at the Diocesan Office. A fee of Rs. 5/- will be charged for an application form.

Candidates should be able to type and work in English. They also must have some knowledge in Book keeping.

They should be prepared to work in all areas in the Northern Province.

Applications close on the 15th of July.

Secretary,
J. D. C. S. I.,
Diocesan Office.
Vaddukoddai.

## IN MEMORIAM

**Edwin John Jeyarajah**
called Home 30-6-83

**Caroline Thiraviam Jeyarajah**
called Home 22-7-68

*Precious Father loving Mother,*
*Fly accross the lonely years,*
*And old Home scenes of my childhood,*
*In fond memory appear.*

Affectionately remembered by their loved ones.

10, Church Road,
Chavakachcheri.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**
Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது
நீதி ஜனத்தை உயர்த்தும்: பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 147] 26-6-87 [இதழ் 26


# ★ பாலர் நேசன் ★

— சிறுவர் மலர் —

## காற்று!

காற்றே! உன்னைப் பெற்றது யார்?
காட்டில் மேட்டில் விட்டது யார்?
ஊற்றைப்போலப் பெருக்கெடுத்தே
உலாவப்போகும் கதையென்ன?

தேக்கம் இன்றித் திரிகின்றாய்;
தெரியாதெங்கும் நுழைகின்றாய்;
தூக்கம் என்போல் கொள்வாயோ?
தூங்கா தெங்கும் செல்வாயோ?

குழந்தை கண்ணில் குளிர் செய்வாய்;
குன்றைப் பிய்த்தே தூள் செய்வாய்;
பழங்கள் உலுக்கி உதிர்க்கின்றாய்!
பாட்டியைத் தள்ளிச் சிரிக்கின்றாய்?

முகிலாம் பஞ்சின் மூட்டைகளை
மேலே உருட்டிப்போகின்றாய்!
தவிக்கும் உலக உயிர்களுக்குத்
தண்ணீர் பிழிந்தே தருகின்றாய்!

உலகின் மென்மை நீயேதான்!
உலகின் வன்மை நீயேதான்!
உலகின் மூச்சே! உருவற்ற
உயிரே! காற்றே! பழம்பொருளே!

துரை மாணிக்கம் —

## புதிய மானிடம்

(முற்றொடர்)

உபதேசியார் முகம் கோபத்தால் ஆழிபோல் பொங்கியது! அடக்கிக்கொண்டே எழுந்தார் மேசையைத் திறந்தார் சுருட்டு ஒன்றுமே இல்லை; சுருட்டு வாங்கி வைக்காமல் இருந்தமைக்குச் சுடு சொற்கள் சில வீசினார்; சுற்றும் முற்றும் பார்க்க எழுந்தார்; மூன்றாம் வகுப்புப் படிக்கும் செல்வா அங்கு வந்தான்! டேய் தம்பி இரண்டு புலிக் கொடி சுருட்டுக்கள் வாங்கிவா! என்று கடைக்கு அனுப்பினார் நிமிடங்கள் பல கடந்தன சுருட்டு வாங்கச் சென்றவனை வரக்காணோம் அங்குமிங்கும் உலாவினார்; அடிக்கடி வெளியே எட்டிப்பார்த்தார்! கோயில் குட்டி வந்து 'சார் மணி இரண்டு அடிக்கலாமா? நேரம் ஆயிட்டு என்றான்.' உபதேசியார் அரைமனதோடு ஆலயம் புறப்பட்டார்: தோட்டா இல்லாத துப்பாக்கி போல சுருட்டுக்குடி இன்றி ஆலயம் புகுந்தார் சுருட்டு இன்றி சுருதி குறைந்து பீடத்தின் பக்கம் போக மணியும் இரண்டு அடித்தது. முழங்கால் படியிட்டார். கீர்த்தனையைத் திறந்து கீதம் 121ஐத் துவக்கினார். சபையார் சத்தமாய்ப் பாட, உபதேசியாரும் உச்சத் தொனியில் பாடினார்: நான்காம் கவி பாட ஆரம்பித்தனர்.

'புதிய சிந்தை புதிய ஆசை புதுப்பித்தாக்கவே அதைப் புதுப்பித்தாக்கவே' — 'இக்கவி பாடும் வேளை, கடைக்குச்சென்ற செல்வா வீட்டில் உபதேசியாரைக் காணாமல் ஆலயத்துக்குள் வந்துவிட்டான்; நேராக பீடத்தண்டையில் வந்து இரண்டு சுருட்டுக்களையும் 'இரட்டைக்குழல் துப்பாக்கி போல' உபதேசியாரை நோக்கி நீட்டினான்; 'புதியசிந்தை' என்று பாடிக்கொண்டிருந்த உபதேசியார் புலியைக் கண்ட எலியைப்போல புலிக்கொடிச் சுருட்டைக் கண்டு புழுங்கினார்; மெதுவாக இருபுறமும் திரும்பிப் பார்த்தார்; சபையார் பையனின் கையில சுருட்டைக் காணவில்லை; ஏதோ காணிக்கை கொடுப்பதாக நினைத்துக்கொண்டு இருந்தனர்.

உபதேசியார் அவனைப் பார்த்து வெளியேபோ! வெளியே போ என்று மெதுவாகக் கூறினார்! அவன் சுருட்டுசார் பிடிக்க என்றான்; டேய்! இது ஆலயம்; இங்கே கொண்டுவராதே! என்றார் பையன் ஒன்றும் புரியாமல் வெளியே சென்றுவிட்டான்; அந்தோ! புலிக்கொடி சுருட்டு புனிதமான ஆலயத்துக்குள் வருவதற்கு நான் ஏதுவாகிவிட்டேன்' என்று துடித்தார் புனிதனைப் புகழும் வாயிலே புலிக்கொடி சுருட்டா? புகைக்கும் பழக்கம் புனித இடத்தைக் களங்கப்படுத்த நான் காரணமானேனே என்று கலங்கினார்; அவரிடம் மறைந்து கிடக்கும் வேறு பல பாவக்கிரியைகளும் நினைவிற்கு வந்தன.

'இயேசுவே! இனி பாவ இச்சைகள் நிறைந்த பழைய மனிதனைக் களைந்துபோட பலன் தாரும்!' என்று பிரார்த்தித்தார் ஆராதனை முடிந்தது. அகத்திலே புதிய சிந்தை படிந்தது பழைய மனிதன் கதை மறந்தது. உபதேசியார் இல்லம் திரும்பினார். செல்வாவிடம் இரண்டு புலிக் கொடி சுருட்டையும் வாங்கி சுக்கு நூறாகப் பிய்த்து வெளியே வீசினார் தம்பி! இனிமேல் சார்வாள் புகை பிடிப்பதில்லை. இன்று முதல் புதியமனிதனாக, புதிய உபதேசியாராக மாறிவிட்டேன், என்று புன்னகைத்தார். உபதேசியாரின் மனைவி உள்ளம் குளிர ஆண்டவனைத் துதித்தாள்.

'புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளுங்கள்'.

[எபே 4:24]

ஞா. இராசாமணி.

## ஓர் ஆராதனை வேளையில்

ஓய்வுநாட் காலை எட்டு மணிக்கெல்லாம்
ஆலயம் அடைந்தனர் மக்கள்
ஓதிடும் வேதக் கருத்தினுள் ஒன்றியே
உட்கார்ந் திருந்தனர் அன்னோர்
சாய்வு வாங்கிலே உடனமர்ந் திருந்தவன்
சற்றே சரிந்தனன் என்மேல்
சங்கடப் பட்டு யான் அவனை எழுப்பியே
சரிசெய் திருந்திடுங் காலை
'பெனச்' மேல மற்றுமோர் மங்கை சரிந்தனள்
பாடல் ஒலித்ததன் பின்னும்
பதட்டம் இன்றித் தூங்கினாள்; ஈதையாள்
பகரவும் காரணம் உண்டு.
ஆலயம் எதற்கு? உறங்கவா? கிறிஸ்துவின்
போதனை கேட்கவோ சொல்வீர்!
புனிதன கோவிலை விடுதி போலாக்கினீர்
புத்தியை அடைகுவை தோரே!
கண்ணை மூடியே செபிக்கும் வேளையில்
கலைந்து சென்றனர் சிலபேர்
காணிக்கைப் போட்டிட பயந்தோ என்னவோ
கடுகி நடந்தனர் வெளியே
என்னடா போதனை இத்தனை நேரமென்
றெரிச்சல் அடைந்தவர் கூட்டம்
இருக்கை விட்டேயவர் விருட்டென போயினர்
இருந்தவர் ஒருசில பேராம்
விண்ணவர் சேனைஎவ் வேளையு மேயிறை
தன்னைப் புகழுது மேலே
வெற்று மனிதரோ தேவனின் கோவிலை
வேலைப் படுத்துதல் கண்டீர்!
இன்னொரு முறையுமே மன்னியு மென்றும்
இயேசு மொழிந்த தெல்லாம
இவரை நினைந்துதான் இருக்குமோ? அறியேன்
என்மனம் எரிகிறதுள்ளே!

— (தனராஜ்)

## புன்னகை - அது என்ன விலை?

ச. மனோகரன்

ஆப்ரகாம் லிங்கன் ஒரு சமயம் சொன்னான்: 'நான் சிரிக்கிறேன் அழக்கூடாது என்பதற்காக'.

ஒரு வயதான பெண்மணி புகைப்படக் கலைஞனிடம் சென்றாள். காமிராவுக்கு முன்பு அவள் அமர்ந்தாள்.

'எங்கே சிரியுங்கள்...' என்றான் கலைஞன் வழக்கம்போல. அவள் சிரிக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை

'ம்... இன்னும் கொஞ்சம்...' அதற்கு அவள், 'இங்கே பாரப்பா என்னைப்போன்ற வயதானவள் எப்படிச்சிரித்தாலும் அப்படித் தான் இருக்கும் ... இதயத்தில் சந்தோஷம் இருந்தால்தான் முகத்தில் பிரகாசம் தெரியும்' என்றாள்

'உங்கள் மனதில் துக்கமிருந்தாலும், முயன்றால் சிரிக்கலாம்... விரைவில் உங்கள் இதயத்திலும் 'படக் படக்' கென மகிழ்ச்சி ஆரவாரம் ஒலிக்கும் .. முயன்றுபாருங்கள் அம்மா' என்றான் கலைஞன்.

அந்த அம்மையாருக்கு வெற்றி கிடைத்தது புகைப்படத்தைப் பார்த்தபோது அவளால் நம்பமுடியவில்லை.

'சிரிப்பில்லாத வாழ்க்கை போரடிக்கும் ஆனால், நல்ல சிரிப்பு உணர்வோடு நாம் பிறக்கவில்லை மற்றகலைகளைப்போலவே, இதற்கும் வளர்ச்சியும் பக்குவமும் தேவை' என்கிறார் ஆன் பானிஸ்டர் என்றமேதை.

நீங்கள் எப்படிச்சிரிக்கவேண்டும் தெரியுமா? உங்கள் வாயை அகலத்திறந்து கொள்ளுங்கள் அப்பொழுதுதான் தீர்க்கமான சத்தம் தெளிவாக வர ஏதுவாயிருக்கும். உங்கள் முகத்துக்குச் ஷேவ் செய்யும்போது, தலையை எந்த நிலையில் வைத்துக் கொள்ளுகிறீர்களோ, அப்படி உங்கள் பிடரியைப் பின்னுக்குப் போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் தலைமயிரைப் பிடித்துக்கொள்கிற மாதிரி உங்கள் கைகளைப் பாவித்துக்கொள்ளுங்கள் ... இனிச்சிரியுங்கள் சிரித்துக் கொண்டே யிருங்கள்—உங்கள் இதயம் ஆனந்தப்பெருக்கில் ஆரவாரித்து அடங்கும்வரை!

ஆஹா .. இதுவல்லவோ சிரிப்பு 'ரொம்பவு சிரித்து விடாதீர்கள். உங்கள் தலையில் வழுக்கை விழுந்துவிடும்' என்று எச்சரிக்கை விடுகிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள்.

நகைச்சுவை உணர்வு (Sense of humour) என்பதுதான் என்ன?

வாழ்க்கையை சீரியல் விஷயமாக எடுத்துக்கொள்ளாத உணர்வா? இந்த உலகில் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய கலைகளில (art of living) ஒன்று? அல்லது ஜீவிய காலத்தையே ஒரு பெரிய ஜோக்காக நினைத்துக் கொள்ளும் திறனா?

ஒருதடவை எடிசனுடைய விஞ்ஞானக்கூடம் தீவிபத்துக்குள்ளாகி சாம்பலாகிவிட்டது. அவருடைய அநேக அற்புத சிருஷ்டிகள் யாவும் இரையாகிவிட்டன. எடிசன் என்ன சொன்னார் தெரியுமா?

நான் மறுபடியும் புதிதாக என்வேலையைத் தொடங்க ஏதுவாயிற்று எனது பழைய தவறுகளெல்லாம் அழிந்துபோய்விட்டது.

(தொடரும்)

தாரகை ஒளி

ஒருவர் பழகும் முறை அவர் உள்ளத்தைக் காட்டும் கண்ணாடி.

— க. தே —

# எங்கள் கருத்து

## மாணவர்கள் ஒழுங்கு!

இன்று நமது நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்கள், அங்கு படிக்கும் மாணவரின் ஒழுங்கீனத்தால் அடிக்கடி பூட்டப்பட்டு வருவதை நாம் அறிவோம். அரசியல் வாதிகள் தம் சுயநலத்திற்காக, மாணவ சமுதாயத்தில் ஒழுக்கக்கேட்டை உண்டாக்கி, மாணவரை திசை திருப்புவதையும் நாம் காண்கின்றோம். இது மக்கள் கவலைக்குரிய காரியமாகும்.

மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு ஒழுங்கு உயிர்நாடி போன்றது. நம் மக்களிடையில் இப்பொழுது ஒழுங்கு குறைந்து வருகிறது. நாகரிகம், பண்பாடு இவற்றிற்கெல்லாம் அடிப்படை ஒழுங்குதான். ஒவ்வொருவரும் தாம் தாம் மேற்கொண்ட போக்கு, பிறரின் சரியான போக்கிற்குத் தீங்கு வருவிக்காமல் இருக்கும்படி நடப்பதுதான் பண்பட்ட ஒழுங்கு.

'உன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகிறாயோ, அப்படியே நீ பிறரிடம் நடந்து கொள்ளுதல் வேண்டும்' என்றார் இயேசுபிரான்.

இன்றைய சூழ்நிலையில், மாணவரிடம் ஒழுக்கங்குறைந்து வருகிறது. மக்கள் ஒருவருக்கொருவர் பகைவர்கள் போல் நடந்து கொள்கின்றனர். ஒவ்வொருவரும் பிறர் நலங்கருதாது தன்னலங்கருதியே வாழ்கின்றனர். பள்ளிக்கூடங்களில் அரசாங்க அலுவலகங்களில், தொழிலகங்களில் உத்தம பணிகளை ஒழுங்காயும் நேர்மையாகவும் செய்வதில்லை. பணம்பெறும் நோக்குடன், தம் கடமைகளில்தவறு செய்து வருகின்றனர். நாட்டின் அமைச்சர்களும் ஒழுங்காகத் தம் கடமைகளில் கருத்துச் செலுத்துவதில்லை.

இத்தீய போக்கிலிருந்து நம் நாட்டைக் காக்க வேண்டும். மாணவர் சமுதாயம் சீர்குலைந்து போவதற்கு, முதியவர்களின் ஒழுங்கீன வாழ்வே என்பது மிகையாகாது. மாணவர்கள் இதனை உணர்கிறார்கள். இருந்தும் தமது போக்கை அவர்கள் மாற்றியமைக்க முடியாது தத்தளிக்கின்றனர்.

'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற முதுமொழிக்கிணங்க, நமது சமுதாயத்தின் முதியோர் ஒழுங்கைக் கடைப்பிடித்து பணியாற்று வந்தால், நமது மாணவ சமுதாயம் ஒழுக்க நெறியில் ஒழுக ஏதுவாயிருக்கும்.

நமது பிள்ளைகள் சிறுவர்களாயிருக்கையில் ஒழுங்கைக் கடைப்பிடித்தால் தான், பெரியவர்களாக ஆகும்போது அவர்களின் வாழ்க்கையும் செப்பமுற்று விளங்கும். அன்பும் பணிவும் பிறர் நலங்கருதி பணியாற்றும் பண்பும் உடையோராய் மாணவர்கள் வளர வேண்டும். இதற்கு ஆசிரியர் மட்டுமல்ல, பெற்றோரும் துணையாயிருத்தல் வேண்டும்.

நமது மாணவர் அன்புள்ளவர்களாகவும், அறிவுள்ளவர்களாகவும், பண்புள்ளவர்களாகவும், திறமையுள்ளவர்களாகவும் மகிழ்வுடன் வாழ்ந்து புகழ் பெறுவதை விட, இவ்வுலகில் நாம் வேறு எதை விரும்பமுடியும்.

உற்ற கல்வியும் ஓங்கிய செல்வமும்
பெற்றவன் ஆயினும் பெரியோன் ஆயினும்
ஒழுங்கிலான் ஒருவனை விலங்கே விளிக.

## செய்திகள்

### கனடா நாட்டின் உதவி

வவுனியா மாவட்டத்திலுள்ள இராமனுஜங்குளம் என்னும் கிராமத்தில் மக்களின் குடிதண்ணீர்ப் பிரைச்சனையைத் தீர்க்கும் முகமாக கிணறுகளை அமைப்பதற்கு மன்னார் வாழ்வுதயத்தின் ஊடாக இலங்கையிலுள்ள கனடா தூதரகத்தின் உதவியினால் ஒரு இலட்சம் ரூபா நன்கொடையாக வழங்க இலங்கையிலுள்ள கனடா தூதரகம் முன்வந்துள்ளது. இக்கிணறுகளை அமைப்பதால் இக்கிராமத்து மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடியுமென அறிகின்றோம்.

இதன் தொடக்கவேலையை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் அவர்களும், வவுனியா

## திருமறை விளக்கம்:

### கிறிஸ்துவும் மோசேயும்

கிறிஸ்துவே இரண்டாவது மோசே, ஆனால் மோசேயை விட மிக உயர்ந்தவர். புனித மத்தேயு இந்த சமத்தன்மையை வெவ்வேறு வழிகளில் விளக்குகிறார்.

1. எகிப்திலுள்ள பார்வோன் மன்னன், இஸ்ரவேலரின் ஆண் குழந்தைகளை அனைத்தையும் கொல்லும்படி ஆணையிடுகிறான் —

ஆனால் தெய்வாதீனமாக மோசே தப்பிக்கொள்கிறான்.

அதுபோல ஏரோது மன்னனும் பெத்லகேமைச் சுற்றியுள்ள எல்லா ஆண் குழந்தைகளையும் கொல்லத் திட்டமிடுகிறான்.

இத்திட்டம் குழந்தை இயேசுவைக் கொல்லவதற்காகவே. ஆனால் இயேசு ஏரோதின் கரங்களில் சிக்காமல் தப்பிக்கொள்ளுகிறார்.

2. மோசே பழைய உடன்படிக்கையை (ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். கிறிஸ்துவோ புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார்.

3. சீனாய் மலையிலிருந்து மோசே பழைய சட்டத்தொகுப்பை (10 கட்டளைகள்) இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்டார். இயேசுவோ மேலொரு மலையிலிருந்து புதிய சட்டத்தொகுப்பை பொழிந்தார் (மலைப்பொழிவு).

4. மோசேயைப்பற்றி, அவர் மிகவும் இனிமையான குணமுள்ளவர் என்று கூறப்பட்டுள்ளது. (எண். 12:3) இயேசுவோ, நான் சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவனாயிருக்கிறேன். நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்.' (மத். 11:29)

மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு. ரீ. லங்காநேசன் அவர்களும், இம்மாதம் 9ஆம் திகதி, புனக்கூழை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தார்கள். இதனோடு மேலே கிறிஸ்தவ முறைப்படி தொடக்கி வைக்கப்பட்டது.

### தமிழ் நாட்டில் அகதிகள்

தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களில் மூன்றரை லட்சத்திற்கும் அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருக்கின்றார்கள். இவர்களின் பராமரிப்புக்காக இந்திய அரசு இதுவரை 10 கோடி ரூபாவைச் செலவிட்டது.

இவர்களை விட இந்தமாதத்தில் 1000 க்கும் அதிகமான அகதிகள் தமிழ்க் கடற்கரைகளில் தஞ்சமடைந்துள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தமிழகம் போவதற்கு, யாழ் குடா நாட்டின் கரைகளில் படகுகளுக்காக காத்திருக்கின்றனர்.

### யாழ். செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணத்தில் போதியளவு உணவுப்பொருள் இருப்பதாக அரசதகவல் சாதனங்கள் தெரிவித்துள்ள செய்திகளுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் மறுப்புத் தெரிவித்து, கொழும்பிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்குக் கடிதம் அனுப்பியுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள உண்மை நிலையை, ஜெனிவாவிலுள்ள தாய்ச் சங்கத்திற்கும் தெரியப்படுத்த வேண்டும் என அறிவித்துள்ளனர்.

## நாடுகள் நாலுவிதம்

**பிரான்ஸ்**

பிரெஞ்சுக்காரர்கள் ஒவ்வோர் ஆண்டும் 600 மில்லியன் நத்தைகளை சாப்பிடுகின்றார்கள். அவர்கள் ஓராண்டில் சாப்பிடும் நத்தைகளை வரிசைப்படுத்தினால் அவை உலகத்தை ஒரு தரம் சுற்றி வரும்.

**டென்மார்க்**

107 நாடுகளை ஆராய்ந்ததில் இன்று உலகிலேயே வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் பிரச்சனைகள் அதிகமின்றியும் வாழ்பவர்கள் டென்மார்க் மக்களே என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

**அமெரிக்கா**

✻ சராசரி ஒவ்வொரு அமெரிக்கரும் தனது ஆயுளில் 17 சதவீதத்தை தொலைக்காட்சி பார்ப்பதிலும், காரை ஓட்டுவதிலும், அதில் அமர்ந்து காத்திருப்பதிலும் அதனைச் சுத்தப்படுத்துவதிலும், செப்பனிடுவதிலும் கழிக்கின்றார்களாம்.

✻ டெட்ராயிட் நகரத்தில் தற்போது பழமையான பிரபல ஹோட்டல் ஒன்றில் சமையலறையில் வளர்ப்புப் பிராணிகளுக்கு விடுதி திறக்கப்பட்டுள்ளது. வருகையாளர்களிடம் கூடுதல் பணம் பெறப்பட்டு வளர்ப்புப் பிராணிகளுக்கு நல்ல உணவு வழங்கப் பழக்கப்படுத்துகிறார்.

**சீனா**

சீனாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஹெலாங்ஜியாங் மாநிலத்தில் தவளைப் பண்ணை ஒன்று இருக்கிறது. 1980-ம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தப் பண்ணையில் லட்சக்கணக்கில் தவளைகள் இருக்கின்றன. இந்த தவளைகளிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் மருந்தாகவும் பயன்படுகிறது. மேலை நாடுகளில் தவளைக்கால்களை விரும்பிச் சாப்பிடுகிறார்கள்.

## அறிஞர் பேர்ட்ராண்ட் ரஸலின் எழுப்பிய வினாக்கள்!

இன்றைய நாகரீக உலகம் பிழைத்திருக்குமா அல்லது அழிந்து விடுமா என்பதை நிர்ணயம் செய்வது எத்தகைய நல்லவர்களின் கையில் இருக்கிறது!

உலகமக்களின் மூன்றில் இரண்டு பேர் பட்டினி கிடக்க மணி ஒன்றிற்கு 47 கோடியே 60 லட்சம் ரூபா வீதம் ஆயுதங்களுக்காகச் செலவாவதை நாம் அனுமதிப்போமா?

## மறுபடியும் பொம்பர் குண்டு வீச்சு!

யாழ். நகர், உடுவில், பகுதிகளில் பொம்பர் விமானங்கள் கடந்த சனிக்கிழமை 20-6-87 மாலை திடீரென குண்டு வீச்சுக்களை மேற்கொண்டன. பாதுகாப்பு அமைச்சர், யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று அறிவித்ததனை அடுத்துச் சில நாட்களின் பின்னர் மேற்படி குண்டு வீச்சு நடைபெற்றது. பல வீடுகள் சேதமடைந்தன. உடுவில் மகளிர் கல்லூரியும் சேதமடைந்தது. கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம் முற்றாகச் சேதமடைந்தது.

EDITORIAL

## The Indian Food Mission

Since *4-6-87*, when the five Jet *Antonovs* of the the Indian Air Force, intruded into the Sri Lankan air space over the Jaffna Peninsula (in the dispiriting aftermath of the Vadamaradchi military operation), *food for the Jaffna people* has been the overriding concern of the Indian government and topic Number One, whether you open the morning newspaper, or tune in, the Radio or watch Television.

The calendrical coincidence of June 4th — the date of the Mercy Air-drop Food Mission in Jaffna with June 4th, the official date announced by the Sri Lankan government as the date for the lifting of the five-month of FUEL EMBARGO on Jaffna residents proved a feather in the cap of the New Delhi officials handling the Sri Lankan situation. It was perhaps an increasing reminder to them of Shakespeare's oft quoted lines "*There is some soul of goodness in things evil would men observingly distil it out.*"

Despite the bickering on the groundrules that govern humanitarian gestures and subtle gibes of unsolicited aid which India was giving to Sri Lanka, ISLAND PRIDE, the Indian food vessel arrived at Kankesanthurai Port on Thursday (25-6-87) noon with a consignment of 800 tons of food supplies for the beleaguared residents of the Jaffna Peninsula — an eloquent testimony to the vitality of the world's largest democracy,

No one can dismiss out of hand the notion that a certain halo surrounds the Indian Food Mission to Jaffna. It underscores *two* cardinal facts about the contemporary situation in the Jaffna Peninsula on which there have been serious differences of views between *New Delhi* and *Colombo*.

One is that food scarcity in the Jaffna Peninsula exists, despite many attempts to mask the scarcity. "*A mask*", Oscar Wilde once said "*shows more than a face*".

It may not be altogether untrue that that the Jaffna farmers had a good harvest of rice this year. But the war situation in the country prevented many farmers from enjoying the fruits of their labour. Many of them had to run away from their homes, their farms and fields because of the establishment of army mini camps close to their houses. Distress sales of harvested paddy and even cattle and goats became the order of the day. In some instances unharvested paddy was reported to have been destroyed by military action. Transport difficulties caused by the fuel embargo also compounded the situation.

The other cardinal fact is that it was the Tamil civilian in Jaffna who ultimately fell a victim to the strong arm poised by the state over the "Tamil rebels". In this context, it became necessary for India to shift the emphasis in Jaffna from a pre-occupation with the political problem of standing up to terrorism, to the *human problem* of relieving human distress and agony in the North caused by a protracted confrontation in which arms and men were pouring in, to destroy whole areas by a military occupation,

In this sense, it is a glowing chapter that is currently being written in Jaffna annals — the attempt of India, to blunt the edge of the Sri Lankan government's sword before laying down the ground rules for PEACE.

---

*For the Record*

**Military Offensive at Uduvil**

After a symbolic relaxtion of their brazen image at Vadamaradchi, the government security forces stirred themselves into action on Saturday (20-6-87) when two bombers unaccompanied by helicopters sneaked into the air space over the Dutch Road almost unnoticed and while many were yet in the midst of a Saturday noon nap, dropped a bomb which fell on a tamarind tree on the side of 'Dutch road', hardly 50 yards from the main gate of the Church. The blast shook the whole area and everyone took to the bunkers.

Soon three other bombs fell one after another in the same area reducing to almost rubble *two* civilian houses and damaging the third house on the row. All the birds in the fowl-run in the house escaped, except three. The operation lasted for about 30 minutes.

Mercifully no humam life was lost. The lady and daughter in one of the houses escaped miraculously.

The Uduvil Girls' College was *not* damaged as reported in some papers But the impact of the sustained machine-gun fire and the crash of the bombs in the vicinity had some effect on the building.

**SANDER'S HALL, Tellippalai**

A historic century old building which today presents a poignant sight at the Union College premises is *SANDER'S HALL*, which in the hey-day of the American Mission in Ceylon was the main building of a *Tamil Teachers' Training College* and *Industrial School* run by fhe Mission as grant-in-aid Instituitions. The Hall was declared open in August *1884* by His Excellency Sir Arthur Gordon, the Governor of Ceylon. It commemorated the first Principal of the Training College and Industrial School *Rev. Marshall Sanders*.

The following is a brief extract of an account from Mission records on how the building was put up:—

> "The parents of the island of Karadive contributed the rafters for the Verandahs. Nearly every old student gave a month's income to the building. Every present pupil pledged Rs. 5. Other native friends contributed Rs. 1000 in money and material.
>
> All the masons, carpenters and coolies gave from one day to a week of labour. More than half of all the work on the building was wrought by the pupils of the *Industrial school* at less than half the cost of ordinary labour, the progress of the work being so planned as to make the most of the labour by pushing it forward during vacations and on the industrial days of term time ...... The building was completed at a cost of Rs. 8000 representating a value of more than Rs. 12,000 at ordinary rates for similar work."

The American Board pledged 1000 dollars on condition the remaining amount is collected locally. Among the first batch of Trainees who completed the four year course at the Tellippalai *Training and Industrial School* was *Prof Allen Abraham* of Halley's Comet fame. He was among those students who made the bricks for Sander's Hall and literally built it stone upon stone.

---

### Bishop John

Bishop John who had sixteen years of glrious ministry as a Bishop in Madya Kerala passed away on the 27th February.

During his Episcopate the Diocese registered many-sided growth. New church buildings were erected an old ones renovated. A training College, an Arts and Science College were set up besides many educational institutions A number of hospitals, hostels and creches were established for the benefit of the backward classes in the Church. The rural development schemes and Social Welfare Activities under the auspices of the Socio-Economic Development Society and Backward People's Development Corporation are standing testimony of his efforts to uplift the downtrodden.

He was a commander who added a sweet grace to his powerful authority and therefore was obeyed with respect, even by those who disagreed with him. Once he had made a decision he acted on it. When faced with adversities he was calm and confident. A widely travelled cleric, Bishop John was well known for his interest in singing and sports. He also had a subtle sense of humour.

The body clothed in Episcopal robes was moved to the Olessa Parish Church on Sunday moring and after a short service it was taken in procession to the Cathedral at Kottayam where the last service was led by Rt. Rev. M. C. Mani, Most Rev. I. Jesudasan, Moderator, Church of South India, Most Rev. Alexander Mar Thoma, Metropolitan, Rt. Rev K. C. Seth and Bishop Mar Aprem gave short addresses. After the service in the Church there was a funeral procession along the main streets of Kottayam in which choirs from neighbouring churches Diocesan and other clergy and hundreds of people participated. It was a glorious manifestation of the love and respect in which he was held by all sections of the people. The coffin was placed outside the chancel of the Cathedral on the southeast side in the presene of a huge crowd.

— S. I. C.

### Examination Success

*Mr. J. T. Satcunananthan*, a Civil Engineer who was attached to the Mahaweli Project before he left the Island has been successful in the M. Sc. Examination of *Long Beech University*, California.

He is the son of Mr. J. T. Thambiratnam and Mrs Thambiratnam of Uduvil and is an Old Boy of Union College, Tellippali.

---

### Hope and the Ideology of National Security

Shardrach, Meshach, and
Abednego,
is it true
that see National Security
as the supreme value
are like Nebuchadnezzar
with his golden statue
that the king commanded
to be adored?
Adoration today
consists in the idea that,
in defense of the supreme value,
everything is permissible:
Kidnappings, tortures,
disappearances, murders.
Everything is permissible
to safeguard
National Security.
Is this
when one must be willing
to be cast
into the fiery furnace?
Clearly, the Spirit of God
inspires a new song
that will encourage
the victims
of the idolatries of every age

— Archbishop Dom Helder Camara

---

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. Q/J/64/News/87.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 26th June 1987 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna